**செ. கு. எண்**: 389 **நாள்**: 04.11.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 4.11.2012

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 28.10.2012 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், மேலவெண்மணி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகைய்யா பிள்ளை என்பவரின் மகன் திரு. பக்கிரிசாமி ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

29.10.2012 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தலையுடையவர்கோயில்பத்து கிராமத்தைச் சேர்ந்த திரு. தியாகராஜன் என்பவரின் மகன் திரு. இளங்கோராஜன்;

31.10.2012 அன்று திருவண்ணாமலை நகரத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு. ரவி;

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், முதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. உலகநாதன் என்பவரின் மகன் செல்வன் மகிழேந்தி;

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம், கொசவன்பேட்டையைச் சேர்ந்த திரு. தியாகராஜன் என்பவரின் மகள் செல்வி யோகலட்சுமி;

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், வெண்மணி கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மனைவி திருமதி குஞ்சம்மாள் ஆகியோர் சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

வேலூர் நகரம், சைதாப்பேட்டையைச் சேர்ந்த திரு.பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. நாகப்பன்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், ஆர்.கொல்லப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. அப்துல் சமது என்பவரின் மனைவி திருமதி கைருன்னிசா மற்றும் திரு. பாபு என்பவரின் மனைவி திருமதி குல்ஜார்;

காஞ்சிபுரம் மாவட்டம், கொட்டிவாக்கத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மனைவி திருமதி தனலட்சுமி ஆகியோர் குடிசை வீடு இடிந்து விழுந்ததால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், டி.கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமன் என்பவரின் மனைவி திருமதி செந்தாமரை மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

1.11.2012 அன்று வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், திட்டவிட்டுபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சாமண்ணன் என்பவரின் மகன் திரு. மணி குடிசை வீடு இடிந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தர்மபுரி மாவட்டம், சிவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் திரு. அருள்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வாட்டாக்குடி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. சேகர் என்பவரின் மகன் திரு. ஐயப்பன்;

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், அன்னவாசல் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவரின் மகள் திருமதி மாலதி ஆகியோர் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், இளையனார் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தாண்டவராயன் என்பவரின் மகன் திரு. அய்யனார் கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துகவுண்டர் என்பவரின் மகன் திரு. மணி வெள்ள நீர் வீட்டில் புகுந்ததன் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த 17 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**